## சுருக்கம்

வாடகை – குளச்சல் நகராட்சி – ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்தில் தொலைபேசித் துறை / மின்சார வாரிய அலுவலகங்கள் அமைக்க இடவசதி அளித்தல் – நகராட்சி நிர்வாக ஆணையர் நிர்ணயித்த வாடகைக்கும் குறைந்த வாடகைக்கு வழங்க அனுமதித்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

**அரசு ஆணை (ப) எண். 538** **நாள் 26.12.2008**

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4 ) துறை**

**படிக்கப்பட்டது :**

1) நகராட்சி நிர்வாக ஆணையரின் செயல்முறை ஆணை மூ.மு.எண்.63206/2007, ஆர் 3, நாள் 28.12.07.
2) நகராட்சி நிர்வாக ஆணையரின் செயல்முறை ஆணை எண்.46026/2007/ஆர்.3, நாள் 28.12.07.
3) நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண்.51163/2008 /ஆர்.3,நாள் 14.11.2008

----

**ஆணை :**

நகராட்சி நிர்வாக ஆணையர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்டுள்ள தனது கடிதத்தில், குளச்சல் நகராட்சியில் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர் மேம்பாட்டுத் திட்டத்தின் **(IDS MT)** கீழ் கட்டப்பட்ட கலைஞர் கருணாநிதி வணிக வளாகத்தில் அமைந்துள்ள 10 கடைகளை பி.எஸ்.என்.எல்.நிறுவனம் அலுவலகம் அமைக்க மாத வாடகை ரூ.7,020/–க்கு வழங்கலாம் என்றும், அதே போன்று , அதே வணிக வளாகத்தில் அமைந்துள்ள 6 கடைகளை தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகம் அமைக்க மாத வாடகை ரூ.6,530/– க்கு வழங்கலாம் என்றும் , பார்வை ஒன்று மற்றும் இரண்டில் காணும் செயல்முறை ஆணைகளில் உத்தரவிடப்பட்டது என்றும், ஆனால் பி.எஸ்.என்.எல். நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகியவை தங்களுக்கு வழங்கப்படும் கடைகளுக்கான மாத வாடகையாக முறையே ரூ.5,620/– மற்றும் ரூ.4,500/– மட்டுமே வழங்க இயலும் எனத் தெரிவித்ததாலும், மேற்படி கடைகள் 5 முறை பொது ஏலம் விடப்பட்டும் போட்டி ஏதும் இல்லாததாலும், ஓராண்டுக்கு மேலாக அக்கடைகள் காலியாக இருந்து நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதாலும், மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் நிர்ணயித்த வாடகைத் தொகையை வலியுறுத்தும் பட்சத்தில் அந்நிறுவனங்கள் வேறு தனியார் கட்டிடங்களை குறைந்த வாடகைக்கு நாட வாய்ப்புள்ளதாகவும் கருதி பி.எஸ்.என்.எல். நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகியவைகள் தர முன்வந்துள்ள மாதாந்திர வாடகைக்கே கடைகளை அந்நிறுவனங்களுக்கு வழங்கலாம் என நகர்மன்றத் தீர்மானங்கள் 665 மற்றும் 666, நாள் 23.9.2008–ல் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் குளச்சல் நகரம் சிறிய நகரமாக இருப்பதாலும், இந்நகரில் தனியார் மூலம் அமைக்கப்பட்டுள்ள கடைகளுக்கான வாடகை மதிப்பு நகராட்சி

கடைகளின்வாடகையை ஒத்திருப்பதாலும் , மேற்குறிப்பிட்ட இரு அரசு சார் நிறுவனங்கள் தர இசைவளிக்கும் வாடகைக்கு கடைகளை மாத வாடகைக்கு விட பரிந்துரைக்கலாம் என திருநெல்வேலி மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

2) எனவே, குளச்சல் நகராட்சியில், கலைஞர் கருணாநிதி வணிக வளாகத்தில் அமைந்துள்ள 10 கடைகளை பி.எஸ்.என்.எல். நிறுவனத்திற்கு மாத வாடகை ரூ.5,620/– (ரூபாய் ஐயாயிரத்து அறுநூற்று இருபது மட்டும்)–க்கும், 6 கடைகளை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மாத வாடகை ரூ,4,500/– (ரூபாய் நான்காயிரத்து ஐந்நூறு மட்டும்) –க்கும் வழங்க பரிந்துரை செய்து அரசின் அனுமதி வழங்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3) நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பை அரசு நன்கு ஆய்வு செய்து, குளச்சல் நகராட்சிக்கு ஏற்படும் தொடர் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் பரிந்துரையினை ஏற்று, இந்நிகழ்வினை ஒரு சிறப்பு நிகழ்வாக கருதி, இதனை பிற எந்த நேர்வுகளுக்கும் முன்னுதாரணமாகக் கொள்ளக்கூடாது என்ற நிபந்தனையுடன், குளச்சல் நகராட்சி கலைஞர் கருணாநிதி வணிக வளாகத்தில் அமைந்துள்ள 10 கடைகளை பி.எஸ்.என்.எல். நிறுவனத்திற்கு மாத வாடகை ரூ.5,620/– (ரூபாய் ஐயாயிரத்து அறுநூற்று இருபது மட்டும்)–க்கும், 6 கடைகளை தமழ்நாடு மின்சார வாரியத்திற்கு மாத வாடகை ரூ.4,500/– (ரூபாய் நான்காயிரத்து ஐந்நூறு மட்டும்)–க்கும் வழங்க குளச்சல் நகராட்சிக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

/ ஆளுநரின்ஆணைப்படி/

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5.
திருநெல்வேலி மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்.
நகராட்சி ஆணையர், குளச்சல் நகராட்சி.
நகல்
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளரின்தனிச் செயலாளர், சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(அந II) துறை, சென்னை–9
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.